**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S. 67/2018**

2025–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22ம் நாள் வெள்ளிக்கிழமை நீதிமன்ற தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3–ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Deposition of Witness for** | | | **CW 1** | | |
| பெயர் | ° | ஜெகதீஷ் | தொழில் | ° | வழக்கறிஞர் ஆணையர் |
| தந்தை பெயர் | ° | நடராஜன் | வயது | ° | 38 |
| கிராமம் | ° | கேளூர் | | ° | |
| தாலுக்கா | ° | போளூர் | | ° | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 22.08.2025.** **நேரம் - 1.15**

**முதல் விசாரணை**

இவ்வழக்கில் I.A.No.144/2018ன்படி என்னை வழக்கறிஞர் ஆணையராக நியமித்து உள்ளார்கள். அதற்காக நான் வழக்கறிஞர் வாரண்டை பெற்றுக் கொண்டேன். தாவா சொத்தை 27.07.2019 அன்று நான் பார்வையிட்டேன். வாதி, பிரதிவாதிகள் மற்றும் கிராம நிர்வாக அதிகாரி ஆகியோர் எனக்கு தாவா சொத்தை அடையாளம் காட்டினார்கள். நான் தாவா சொத்தை பார்வையிட Memo of instruction வாதி தரப்பில் கொடுக்கப்பட்டது. மேற்படி Memo of instruction ஐ நான் அறிக்கையுடன் இணைத்து தாக்கல் செய்துள்ளேன்.

2. தாவா சொத்தில் கண்டுள்ள 367/1Cல் 'சி' செட்யூல் சம்மந்தப்பட்டதாகும். அது சுற்றியுள்ள ஐக்பந்தியை குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். நான் குறிப்பிட்டுள்ள சுற்றியுள்ள ஐக்பந்திக்குள் மனுதாரர் ஆறுமுகம் என்பவர் அனுபவத்தில் உள்ளது என்பதை நில அளவர் கூறியுள்ளார் என்று என் அறிக்கையில் கூறியுள்ளேன்.

தாவா சொத்தில் புல எண்.367/1 'A' ஷெட்யூலாக கண்டுள்ளது. தாவா சொத்தில் புல எண்.367/1A 'B' ஷெட்யூலாக கண்டுள்ளது.

3. எனது அறிக்கையில் புல எண் 367/1A என்பது வாதியின் சொத்திற்கு மேற்கே உள்ள பிரதிவாதிகள் சொத்தான புல எண் 367/1B க்கு மேற்கில் புல எண் 367/1A உள்ளது என குறிப்பிட்டுள்ளேன். புல எண் 367/1Cல் சொத்திற்கு நான் சொல்லியுள்ள ஐக்பந்தியில் சர்வே எண். 367/1A வரவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன். ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் எனது அறிக்கை மற்றும் வரைபடம் Exhibit C1 and C2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. புல எண் 367/1Cல் ஆழ்துளை கிணறு (Borewell) இருந்தது என்பதையும் வாதியின் கிணற்றிலிருந்து சர்வே எண். 339/8A கிணற்றிலிருந்து மின்சார ஒயர் பூமியின் அடியில் புதைத்து ஆழ்துளை கிணற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளேன். அதேப்போல் சர்வே எண். 339/8A கிணற்றிலிருந்து புல எண் 367/1Cல் உள்ள முழு நிலங்களுக்கு பைப் லைன் மூலம் தண்ணீர் பாய்ச்சப்பட்டு வந்தது என்று என் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன்.

5. ஆழ்துளை கிணற்றிலுள்ள பைப் லைன் கிணற்று பைப் லைனுடன் இணைக்கப்பட்டுள்ளது என்று என் அறிக்கையில் சொல்லியுள்ளேன். நில அளவர் தாவா இடத்தை பார்வையிடும் போது இருந்த நிலவரம் குறித்து வரைபடம் வரைந்து கொடுத்ததை நான் என் அறிக்கையுடன் இணைத்து தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வரைபடம் தான் **Exhibit.C3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் தாவா சொத்தை பார்வையிட Memo of instruction வாதி

தரப்பில் கொடுக்கப்பட்டது. மேற்படி Memo of instruction ஐ நான் அறிக்கையுடன் இணைத்து தாக்கல் செய்துள்ளேன். அது **Exhibit.C4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை முடிவடைகிறது.**

**(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).**

**நேரம் - 1.45**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-D.V.Koperundevi,
District Munsif,
District Munsif Court,
Arni